## திராவிட மாடல் அரசின் சார்பில் –

# வாசிப்புப் பழக்கத்தை தீவிரமாக ஊக்குவித்து வருகிறோம்!

### உலகப் புத்தக நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

சென்னை, ஏப். 24 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலகப் புத்தக நாளையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில், வாசிப்புப் பழக்கத்தை தீவிரமாக திராவிட மாடல் அரசின் சார்பில் ஊக்குவித்து வருகிறோம் என்று குறிப்பிட்டார்.

உலக புத்தக நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**புத்தகங்கள் புதிய உலகிற்கான திறவுகோல்கள். நாம் வாழ்ந்து பார்க்காத வாழ்க்கை, நாம் சந்திக்காத மனிதர்கள், நாம் பார்த்திராத காலம் என அனைத்தையும் நமக்கு அறிமுகப்படுத்தும் நல்ல நண்பன்தான் புத்தகங்கள்.**

**அதனால்தான், சென்னை, மதுரையைத் தொடர்ந்து கோவை, திருச்சியிலும் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் பெயரில் மாபெரும் நூலகங்களை எழுப்பி வருகிறோம்.**

**மாவட்டந்தோறும் புத்தகக் காட்சிகள், இலக்கியத் திருவிழாக்கள், சொற்பொழிவுகள் என வாசிப்புப் பழக்கத்தைத் தீவிரமாக நமது திராவிட மாடல் அரசின் சார்பில் ஊக்குவித்து வருகிறோம்.**

**"புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்; உலகத்தையே புத்தகமாய்ப் படித்தால் அனுபவம் தழைக்கும்!"**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்நிலையில் சென்னை விமான நிலையத்தில் இருந்து நேற்று இரவு அவர்கள் புறப்பட்டார்கள்.

# சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் செயல்படும் 6 பேருந்து முனையங்கள் மேம்படுத்தப்படும்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பதிலுரை... 13 ஆம் பக்கத் தொடர்ச்சி

பேருந்து விபத்துகளுக்கு, நீதிமன்ற வழக்குகளில் சிறந்த ஆதாரமாக வீடியோ காட்சிகளை சமர்ப்பிக்கலாம். இதனால், போக்குவரத்துக் கழகங்களுக்கான விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறையும். இத்திட்டத்தின் கீழ், ஒரு பேருந்துக்கு ரூ.37,500/- வீதம் 4,000 பேருந்துகளுக்கு ரூ.15 கோடி செலவில் கேமராக்கள் பொருத்தப்படும்.

போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நான்கு வெளிப்புற கேமராக்களை பொருத்துவதன்மூலம் விபத்துகளைத் தடுப்பதற்கு ரூ.15 கோடி செலவில் கேமராக்கள் பொருத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

9. **500 பேருந்துகளில் ஓட்டுநர் கண்காணிப்பு அமைப்பு** (Driver Monitoring System) **மூலம் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முன்னோடி முயற்சி**

பேருந்துகளை ஓட்டுநர்கள் ஓட்டும் முறையை மேம்படுத்தும் விதமாகவும், விபத்துகளை குறைக்கும் விதமாகவும், 500 பேருந்துகளில் முன்னோடி முயற்சியாக AI மற்றும் IR தொழில்நுட்பத்துடன்கூடிய ஓட்டுநர் கண்காணிப்பு அமைப்பு (Driver Monitoring System) அறிமுகப்படுத்தப்படுகிறது. இது ஓட்டுநரின் தலை நிலை, கண் சிமிட்டும் விதம் மற்றும் உடல் அசைவுகளை கண்காணித்து எச்சரிக்கை செய்வதால், ஓட்டுநர் சுயதிருத்தம் செய்து பேருந்தை பாதுகாப்புடன் இயக்கலாம். இதனால் விபத்துகள் குறைந்து பயணிகளின் பாதுகாப்பு அதிகரிக்கும். இந்த அமைப்பின்மூலம் செய்யப்படும் பதிவுகளை, பகுப்பாய்வு செய்து ஓட்டுநரின் வாகனம் ஓட்டும் விதத்தை பயிற்சிகள்மூலம் சரிசெய்யலாம். இத்திட்டத்தின்கீழ், ஒரு பேருந்துக்கு ரூ.40,000/- வீதம் 500 பேருந்துகளுக்கு ரூ.2 கோடி செலவில் கண்காணிப்பு அமைப்புகள் பொருத்தப்படும்.

10. **மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் 20 அரசு தானியங்கி பணிமனைகள் மற்றும் இயக்குநர் அலுவலகத்தில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும்பொருட்டு** LED **திரை வசதியுடன்கூடிய கண்காணிப்பு கேமராக்கள்** (CCTV) **பொருத்துதல்**

அரசு தானியங்கி பணிமனைகளில் பழுதுநீக்கம் செய்திட அனுமதிக்கப்படும் அரசு வாகனங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், பணிமனை நடவடிக்கைகளை கண்காணித்திடவும், மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் 20 அரசு தானியங்கி பணிமனைகள் மற்றும் இயக்குநர் அலுவலகத்தில் LED திரை வசதியுடன்கூடிய கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) ELCOT நிறுவனம்மூலம் ரூ.1.10 கோடி செலவில் பொருத்தப்படும்.

11. **தஞ்சாவூர், திருநெல்வேலி, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் தருமபுரியில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல்**

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கிவரும் அரசு தானியங்கி பணிமனைகளை, நவீனரக வாகனங்களையும் பராமரிக்கும் வகையில் நவீனமயமாக்கிடவும், மேம்படுத்திடவும் முடிவு செய்யப்பட்டு தற்போது, மூன்றாம் கட்டமாக, தஞ்சாவூர், திருநெல்வேலி, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களிலுள்ள அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் ஆகியவை ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

12. திருச்சி மற்றும் சேலத்தில் இயங்கிவரும் ஓட்டுநர் புத்தாக்கப் பயிற்சி மையத்தில் கலந்துகொள்ளும் அரசுத் துறை ஓட்டுநர்களுக்கு மூன்று நாட்கள் தங்கி பயிற்சியில் கலந்து கொள்வதற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்பு துறையின், அரசுத் துறை ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்திட ஓட்டுநர் பயிற்சி மையங்கள் மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் அரசு தானியங்கி பணிமனைகளில் இயங்கி வருகின்றன. தற்போது, இரண்டாம் கட்டமாக திருச்சி மற்றும் சேலம் அரசு தானியங்கி பணிமனைகளில் புத்தாக்கப் பயிற்சி பெறும் அரசுத் துறை ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.1.10 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

13. **புதிய நவீனரக வாகனங்களின் மின்னணு பழுதுகளை கண்டறியும் கருவிகளை மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகளுக்கு கொள்முதல் செய்து வழங்குதல்**

அரசு தானியங்கி பணிமனைகளில், பராமரிப்பு பணிக்கு எடுத்துவரப்படும் அனைத்து வகையான நவீனரக அரசுத் துறை வாகனங்களை பழுதுநீக்கம் செய்வதற்கு ஏதுவாக ஊர்திகளில் பயன்படுத்தப்படும் மின்னணு கட்டுப்பாட்டில் இயங்கும் தொழில்நுட்பங்களை கண்காணிப்பதற்கும், பரிசோதிப்பதற்கும் இதன்மூலம் வாகனத்தில் ஏற்படும் பழுதுகளை கண்டறிந்து அதற்கான பராமரிப்புப் பணிகளை விரைவாக சரிசெய்யும்பொருட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளுக்கு ரூ.30 இலட்சம் செலவில் மின்னணு பழுதுகளை கண்டறியும் கருவிகள் (Diagnostic Tools) கொள்முதல் செய்து வழங்கப்படும்.

இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) குறித்த அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

இயக்கூர்திகள் சட்டங்கள்-நிருவாகம்

14) **காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுதல். மதிப்பீடு ரூ.727.00 இலட்சம்.**

## திருப்பெரும்புதூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு

## ரூ.727 இலட்சத்தில் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டிடம்!

பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன், ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.727.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

15) **மின்னணு அலுவலகம் மற்றும் மின்னணு ஆளுமை பணிக்காக புதிதாக 596 எண்ணிக்கையில் கணினிகள் 269 எண்ணிக்கையில் அச்சுப் பொறிகள் (பிரிண்டர்) மற்றும் 269 எண்ணிக்கையில் ஊடுகதிர் கருவிகள் (ஸ்கேனர்) கொள்முதல் செய்தல். இப்பணிகள் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை வாயிலாக மேற்கொள்ளப்படும். மதிப்பீடு ரூ.488.00 இலட்சம்.**

போக்குவரத்துத் துறையின் மின்னணு அலுவலகப் பயன்பாட்டிற்காகவும், நிர்வாகத்தின் சீரான செயல்பாட்டிற்காகவும், வருங்கால மின்னணு ஆளுமை நோக்கத்திற்காகவும், அனைத்துப் பணியாளர்களின் பயன்பாட்டிற்காகவும் 596 கணினிகள், 269 அச்சுப் பொறிகள் மற்றும் 269 ஸ்கேனர்கள் ரூ.488.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

16) **தமிழ்நாட்டிலுள்ள 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை மாதிரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்துதல்**

பொதுமக்கள் தாங்கள் நேரடியாக அலுவலகத்திற்கு வந்து இலகுவாக மனுக்களை சமர்ப்பித்தல் மற்றும் அலுவலகத்தில் குறிப்பிட்ட பணிகளுக்கு அமர்ந்து இருந்து சேவைகளை மகிழ்ச்சியுடன் பெற்றுத் திரும்பும் நோக்கில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை, மாதிரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாகத் தரம் உயர்த்துதல் தேவைப்படுகிறது.

எனவே, தமிழ்நாட்டில் உள்ள 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை மாதிரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்துதல். இத்திட்டத்தின்மூலம் வெளிப்படைத் தன்மை அதிகரிக்கும், மாற்று நபர்களின் தலையீடு இல்லாமல் பொதுமக்கள் பயன்பெறுவர்.

17) **போக்குவரத்துத் துறையின் சோதனைச் சாவடிகளில் மின் செயலாக்கம் மற்றும்** ANPR **கேமரா, அதிவேகம் கண்டறியும் கருவி, உடலோடு ஒட்டிய கேமரா போன்ற நவீன தொழிநுட்பங்களுடன்கூடிய முன்னோடித் திட்டத்தினை உருவாக்குதல். மதிப்பீடு ரூ.600.00 இலட்சம்.**

வாகனங்களின் தகுதிச் சான்று, பதிவுச் சான்று, காப்பீட்டு சான்று, புகைச் சான்று மற்றும் நடப்பு சாலை வரி குறித்து ஆய்வு செய்தல், அதிவேகத்தைக் கண்டறிதல், ஒரே பதிவு எண்ணில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களைக் கண்டறிதல் போன்ற குற்றங்களை மின்-செயலாக்கம் மூலம் கண்டறியலாம்.

இத்திட்டம்மூலம் சோதனை செய்த இடத்திலேயே மின்னணு சான்றுகளுடன் மின் கட்டண ரசீதினை உருவாக்குதல், மின்னணுச் சான்று தொடர்பான தகவல்களை வாகன உரிமையாளருக்கு நிகழ்நேர அடிப்படையில் அனுப்புதல், உடனடி அபராதம் வசூலிப்பதை எளிமையாக்குதல், வாகன இருப்பிடத்தைக் கண்டறிதல் மற்றும் கண்காணித்தல் போன்றவை செயல்படுத்தப்படும். மேலும் இச்செயல்முறை சாலைப் பயனாளர்களிடையே ஒரு தார்மீக கடமையை உருவாக்கி, போக்குவரத்து குற்றங்கள் தானாகவே கணிசமாகக் குறைக்க பயன்படும்.

18) **வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 5 மாதிரி தானியங்கி வாகன சோதனை நிலையங்கள்** (ATS) **அமைத்தல். மதிப்பீடு ரூ.2,540 இலட்சம்.**

தானியங்கி வாகன சோதனை நிலையம் (ATS) என்பது, மாநில அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தானியங்கி சோதனை நிலையங்களில், சோதனைக் கருவிமூலம் வாகனத் தகுதியை சோதனை செய்யப்படுவதாகும். தமிழ்நாட்டில் 42 தானியங்கி வாகன சோதனை நிலையங்கள் (ATS) அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 18 தானியங்கி வாகன சோதனை நிலையங்கள் அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது, போக்குவரத்துத் துறைமூலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 5 தானியங்கி வாகன சோதனை நிலையங்கள் (ATS) அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

19) **போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகத்தில் "நூலகம்" அமைத்தல். மதிப்பீடு ரூ.50.00 இலட்சம்.**

போக்குவரத்துத் துறை பணியாளர்களுக்கு மோட்டார் வாகன விதிகள் மற்றும் சட்டங்களைப் பற்றிய முழுமையான விவரங்களை பயிற்றுவிக்கவும், இத்துறை தொடர்பான நீதிமன்ற தீர்ப்புகள், சட்டங்கள் ஆகியவற்றின் மீதான நடப்புத் தகவல்களை தெரியப்படுத்தவும், போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகத்தில் ரூ.50.00 இலட்சம் செலவில் நூலகம் அமைக்கப்படும்.

20) **"விபத்தில்லா தமிழ்நாடு" என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் வகையில், அனைத்து பயன்பாட்டு துறைகளுடன் ஒருங்கிணைந்து, மாநிலத்தில் 100 அதிக விபத்துகள் நிகழும் சாலைகளைக் கண்டறிதல்**

தமிழ்நாடு மாநிலத்தில் 6,000-த்திற்கும் மேற்பட்ட சாலை விபத்துகள் நிகழும் பகுதிகளை கண்டறியப்பட்டு, அவை மேம்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அதிக சாலை விபத்துகள் நிகழும் இடங்களில் தீவிரமான முறையில் கண்காணித்து விபத்தினை தவிர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் முதல் முயற்சியாக, "விபத்தில்லா தமிழ்நாடு" என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் வகையில், அனைத்து பயன்பாட்டுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, மாநிலத்தில் 100 அதிக விபத்துகள் நிகழும் சாலைகள் கண்டறியப்படும்.

21) **திறன்மிக்க ஓட்டுநர்களை உருவாக்கும் நோக்கத்தில் சேலம் மாவட்டம், தேவண்ணகவுண்டனூர் கிராமத்தில் ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை அமைத்தல். மதிப்பீடு ரூ.1,725.00 இலட்சம்.**

மாநிலத்தில் திறமையான ஓட்டுநர்களை உருவாக்கும் முக்கிய நோக்கத்துடன் சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுகாவில் உள்ள தேவண்ணகவுண்டனூர் கிராமத்தில் (PPP பங்கீடுமூலம்) ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்படும்.

இந்தியாவில் அதிக விபத்துகள் நிகழ்வதற்கு ஓட்டுநர்களின் தவறும் ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. அதனைத் தவிர்க்கும் முயற்சியாக, ஓட்டுநர்களின் திறன்களை மேம்படுத்த முதல் முயற்சியாக தமிழ்நாட்டில் ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க திட்டமிடப்படுள்ளது. திறமையான ஓட்டுநர்களை உருவாக்குதல் நம் நாட்டிற்கு பாதுகாப்பான போக்குவரத்து அமைப்பினை வழங்கும்.

23) **சாலை விபத்துகளைத் தடுப்பதற்கும் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்கவும் 2025–2026 ஆம் ஆண்டிற்கு சாலைப் பாதுகாப்பு நிதி ரூ.65 கோடியிலிருந்து ரூ.130 கோடியாக உயர்த்தப்படும். மதிப்பீடு ரூ.130.00 கோடி.**

தமிழ்நாட்டில் விபத்துகளை குறைக்கும் நோக்கில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சாலைப் பாதுகாப்பு நிதி வழங்கப்படுகிறது. கடந்தகால ஆய்வில் சுமார் 6,000 விபத்து பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு, கண்டறியப்பட்டுள்ளன. அதில், சுமார் 2,000 இடங்களில் சாலைகள் சீரமைப்பு செய்தல், போக்குவரத்து சமிக்ஞைகள் நிறுவுதல் போன்றவற்றிற்கு முதற்கட்ட ஆய்வில் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

மேலும், சாலைப் பாதுகாப்பிற்கான உச்ச நீதிமன்றக் குழுவின் அறிவுறுத்துதலின்படி, சாலையில் நிகழும் விபத்துகளைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து ரூ.312 கோடிக்கான கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அதன்படி விபத்துகள் குறைப்பு நடவடிக்கைக்காக நிதி ஒதுக்கீட்டு மதிப்பை ரூ.65 கோடியிலிருந்து ரூ.130 கோடியாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய துறையினுடைய மானியக் கோரிக்கைகளை செயல்படுத்துவதற்கும், அறிவிப்பதற்கும் எங்களுக்கு உறுதுணையாக இருந்த அரசு தலைமைச் செயலாளர்

நா. முருகானந்தம், அவர்களுக்கும், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

K. பணீந்திர ரெட்டி, அவர்களுக்கும், நிதித் துறை அரசு முதன்மைச் செயலாளர் T. உதயச்சந்திரன், அவர்களுக்கும், உள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், அவர்களுக்கும், போக்குவரத்து ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, அவர்களுக்கும், MTC மேலாண்மை இயக்குநர் டாக்டர் த. பிரபுசங்கர், அவர்களுக்கும், மற்ற 7 அரசு போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒரேயொரு செய்தியை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த வாரத்தில் பல்வேறு அ.தி.மு.க. தலைவர்கள் டெல்லிக்குப் படையெடுத்தார்கள். அந்த நேரத்தில் "நீங்கள் போடுகிற கணக்கெல்லாம் சரியாக இருக்காது" என்று பேரவை முன்னவர் அவர்கள் சொன்னபோது, உறுப்பினர் வேலுமணி அவர்கள் கூட்டிக் கழித்துப் பாருங்கள் கணக்கு சரியாக வரும்" என்று சொன்னார். அது 'அண்ணாமலை' திரைப்படத்தில் வில்லன் பேசுகிற வசனம். அவர் வில்லன் பேசுகிற வசனத்தை இங்கே பேசிவிட்டு, சென்று விட்டார். எனவே, அவருக்கு ஒரேயொரு பதிலை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டிக் கழித்துப் பார்த்தால் கணக்கு சரியாகத்தான் வரும். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் போடுகிற கணக்கை நீங்கள் கொஞ்சம் கவனத்தில்கொள்ளுங்கள்.

**தமிழ்நாட்டு மாணவிகள் போடுகிற கணக்கு 'புதுமைப் பெண்' கணக்கு.**

**பள்ளிக் குழந்தைகள் போடுகிற கணக்கு 'காலை உணவு' கணக்கு.**

**மாணவர்கள் போடுகிற கணக்கு 'தமிழ்ப் புதல்வன்' கணக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)**

**தமிழ்நாட்டு இல்லத்தரசிகள் போடுகிற கணக்கு கலைஞர் உரிமைத் தொகை கணக்கு.**

**பேருந்துகளிலே பயணிக்கிற பெண் பயணிகள் போடுகிற 'கணக்கு விடியல்' பயணக் கணக்கு.**

**உங்களுடைய கூட்டணியில் இருக்கிற ஆணவ ஒன்றிய அதிகார அரசு போடுகிற கணக்கு அதிகார மமதைக் கணக்கு. அதற்கு எங்களுடைய முதல்வர் போடுகிற எதிர்க் கணக்கு மாநில சுயாட்சிக் கணக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)**

**இதைப் பார்த்து சிறுபான்மையினர் போடுகிற கணக்கு பாதுகாப்புக் கணக்கு.**

**மக்கள் எங்களுக்குப் போடுவது கூட்டல் கணக்கு,**

**மக்கள் உங்களுக்குப் போடுவது கழித்தல் கணக்கு.**

**நீங்கள் சேர்ப்பது பாவக் கணக்கு, பழி கணக்கு.**

**எங்களுடைய முதல்வருக்கு இருக்கிறது நியாய கணக்கு, சத்திய கணக்கு, உண்மைக் கணக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)!**

**இப்போது கூட்டிக் கழித்துப் பாருங்கள். 2026–ல், 234 கணக்கு சரியாக வரும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**தமிழ்நாடு போராடும்! தமிழ் வெல்லும்! திராவிட முன்னேற்றக் கழகம் வெல்லும்! நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)**

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பதிலுரை வழங்கினார்.

## முன்னிலை: அமைச்சர் பி.கே.சேகர்பாபு! தலைமை: வி.சுதாகர்!

# எழும்பூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் மனிதநேயம் 63 - மாபெரும் புகழரங்கம்!

### ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன் – ராஜ கம்பீரன் – புனித ஜோதி – இதய கீதம் ராமானுஜம் சிறப்புரை!

*சென்னை, ஏப்.24.*

*முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - 63, உயர்ந்த கருத்தியல் நிறைந்த அரசியல்! உங்களில் ஒருவர் வகுத்த அறம் பொருள் ! என்ற தலைப்பில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் தலைமையில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் இன்று (24.4.2025 வியாழக் கிழமை) மாலை 6 மணிக்கு மலையாளி கிளப் சேத்துப் பட்டில் நடைபெறுகிறது.*

*கவிதை உறவு மாத இதழ் ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடிய எஸ். ராதாகிருஷ்ணன் புகழ் அரங்கத்தை துவக்கி வைக்கிறார்.*

*இதில் அரசியல் குணசேகர் ராஜா கம்பீரன், எழுத்தாளர் புனித ஜோதி, கவிஞர் இதயகீதம் ராமனுஜம் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா, தயாநிதி மாறன் எம்.பி, பகுதி செயலாளர் சொ. வேலு, அவைத் தலைவர் கோ. ஏகப்பன், கூ.பி.ஜெயின் எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ். எம். நாதன், பரிதி இளம் சுருதி எம். சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம். சி, தலைமை பொதுக் குழு உறுப்பினர் அ. நிர்மலா தேவி, பாத்திமா முசாபர் எம்.சி., சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி, இ. பரந்தாமன், ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், எழும்பூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் பி.எம். யாழினி, ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், எஸ்.மணிமுடி, தமிழன் பிரசன்னா, வே.உமாகாந்த்,*

*எஸ்.ரசூல்,டி.வி. வேலு, எம். மணிமாறன், வி. விஜயகுமார், ஆர். பாபு (எ) சந்திரசேகரன், கே. அன்னபூரணி, எஸ். ஜெகதீசன், எஸ். டால்பின் ஹரி, இ. மொய்தீன், வான்மதி கதிரவன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.*

*இறுதியில் 108 அ வட்டச் செயலாளர் எஸ். சுந்தர்ராஜன் எம் சி நன்றி கூறுகிறார்.*